www.Padasalai.Net www.TrbTnpsc.com

# Kanchipuram District

B

## முதல் திருப்புதல் தேர்வு – 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி | வணிகவியல் | மதிப்பெண்கள்:90

பகுதி – I

I சரியான விடையைத் தேர்வு செய்க. 20x1=20

1. அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர்
அ) ஃபேபாயல் ஆ) டேலர் இ) மேயோ ஈ) ஜேக்கப்

2. குறியிலக்கு மேலாண்மையானது ________ என்பவரால் அமெரிக்காவில் பிரபலப்படுத்தப்பட்டது.
அ) பேராசிரியர் ரெட்டின் ஆ) ஜார்ஜ் ஒடியோர்ன்
இ) ஹென்றி பயோல் ஈ) எப்.டபிள்யூ. டெய்லர்

3. NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ________
அ) 1990 ஆ) 1992 இ) 1998 ஈ) 1997

4. பணச் சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு
அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

5. நாட்டில் ________ பங்கு சந்தைகள் உள்ளன.
அ) 21 ஆ) 24 இ) 20 ஈ) 25

6. தேசிய பங்குச் சந்தையில் புறத்தோற்றமற்ற பத்திர வர்த்தகம் தொடங்கிய ஆண்டு ________ ஆகும்.
அ) ஜனவரி 1996 ஆ) ஜூன் 1998 இ) டிசம்பர் 1996 ஈ) டிசம்பர் 1998

7. இணைய வழி ஆட்சேர்ப்பு என்பது ________ மூலமே சாத்தியம்.
அ) கணினி ஆ) இணையம் இ) அகன்ற வரிசை ஈ) 4ஜி

8. முதலில் வேலை அடுத்தது மனிதர் என்பது ஒரு ________ கோட்பாடு.
அ) சோதனை ஆ) நேர்காணல் இ) பயிற்சி ஈ) பணியமர்த்தல்

9. சந்தையில் உயர்நிலையில் இருப்பவர் யார்?
அ) வாடிக்கையாளர் ஆ) விற்பனையாளர்
இ) மொத்த விற்பனையாளர் ஈ) சில்லறை விற்பனையாளர்

10. இணையத்திற்கு நுழைவு வாயில் என்பது
அ) போர்டல் ஆ) சிபியு இ) மோடம் ஈ) வெப்நராங்

11. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?
அ) மகாத்மா காந்தி ஆ) ஜான்.எப். கென்னடி இ) ரால்ப் நேடர் ஈ) ஜவஹர்லால் நேரு

12. நுகர்வோர் சங்கங்களின் சர்வதேச அமைப்பு (IOW) முதன்முதலில் நிறுவப்பட்டது.
அ) 1960 ஆ) 1965 இ) 1967 ஈ) 1987

13. வணிகத்தின் பரந்த சூழல் ஒரு ________ காரணியாகும்.
அ) கட்டுப்படுத்த முடியாது ஆ) கட்டுபாட்டிற்குட்பட்டது
இ) சமாளிக்க முடியும் ஈ) சமாளிக்க முடியாது

14. புதிய பொருளாதாரக் கொள்கை ________ ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
அ) 1980 ஆ) 1991 இ) 2013 ஈ) 2015

15. சரக்கு விற்பனை ஒப்பந்தத்திற்கு எது முக்கிய உறுப்பாக இருக்கிறது?
அ) இரு தரப்பினர் ஆ) சொத்துரிமை மாற்றம் இ) விலை ஈ) அனைத்தும்

16. எத்தனை மாதங்களுக்கு பின் காசோலை காலாப்தியாகிறது?
அ) 3 மாதங்கள் ஆ) 5 மாதங்கள் இ) 4 மாதங்கள் ஈ) 1 மாதங்கள்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



17. கீழ் குறிப்பிட்ட எந்த செயல் வியாபார தொழில் முனைவோரை சார்ந்தது ?
அ) உற்பத்தி ஆ) சந்தையிடுகை
இ) செயல்பாடு ஈ) மேற்கூறிய அனைத்தும்

18. _______ இந்தியாவை உலகளாவிய வடிவமைப்பு மற்றும் உற்பத்தி மையமாக மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
அ) டிஜிட்டல் இந்தியா ஆ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்
இ) ஸ்டாட்டப் இந்தியா ஈ) வடிவமைப்பு இந்தியா

19. நிறுமச் சட்டம் 2013ன் படி ஒரு நபர் இயக்குனராக _______ நிறுமங்களுக்கு மேல் பதவி வகிக்க கூடாது.
அ) 5 நிறுமம் ஆ) 10 நிறுமம் இ) 20 நிறுமம் ஈ) 15 நிறுமம்

20. _______ கூட்டம் நிறுமத்தின் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே கூட்டப்படும்.
அ) சட்டமுறை ஆ) ஆண்டுப்பொது இ) சிறப்பு ஈ) வகுப்பு

## பகுதி – II 7x2=14

**II எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21. மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.
22. மாற்றம் என்பதன் பொருள் யாது ?
23. இந்தியாவில் உள்ள ஏதேனும் 5 பங்குச் சந்தைகளை பற்றி எழுதுக.
24. பசுமை சந்தையிடுதல் என்றால் என்ன ?
25. கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக ?
26. தனியார்மயமாக்கல் என்றால் என்ன ?
27. வருநிகழ்வு சார் சரக்கு என்றால் என்ன ?
28. டிஜிட்டல் இந்தியாவைப் பற்றி குறிப்பு வரைக ?
29. பகராள் சிறு குறிப்பு வரைக.
30. மின்னணு கற்றல் முறை பற்றி குறிப்பு வரைக ?

## பகுதி – III

**III ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 40–க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 7x3=21

31. குறியிலக்கு மேலாண்மையின் ஏதேனும் மூன்று செயல் முறைகளை பட்டியலிடவும்.
32. ஏட்டுக்கடன் மற்றும் துணிகர முதல் வழங்கு நிறுமங்களைப் பற்றி விளக்குக.
33. புறத்தோற்றமற்ற பத்திரங்கள் என்றால் என்ன ?
34. பயிற்சி திட்டத்தில் பல்வேறு படிகளை எழுதுக ?
35. சந்தையிடுகையாளரின் பங்களிப்பு எவையேனும் மூன்றினை குறிப்பிடுக.
36. தன்னார்வ நுகர்வோர் அமைப்புப் பற்றி விவரி ?
37. உலகமயமாக்கலின் ஏதேனும் மூன்று தாக்கங்களை எழுதுக.
38. மாற்றுச்சீட்டின் சிறப்பு இயல்புகளை கூறுக. (ஏதேனும் 3)
39. தனி உரிமை தொழில்முனைவோர் என்பவர் யார் ?
40. பல்வேறு வகையான முன்னுரிமை பங்குகளை சுருக்கமாக கூறுக ?

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பிரிவு – IV

7x5=35

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

41. அ) மேலாண்மையின் பல்வேறு பணிகளை விளக்குக. (ஏதேனும் 5)

(அல்லது)

ஆ) இயக்குனரின் பல்வேறு தகுதிகளை பற்றி கூறுக ?

42. அ) அரசுப் பத்திரங்களின் இயல்புகளை விவரி. (ஏதேனும் 5)

(அல்லது)

ஆ) தாராளமயமாக்கல் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் ஏதேனும் ஐந்தினை பற்றி விளக்குக.

43. அ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள சமீபகால போக்குகளை விளக்குக.

(அல்லது)

ஆ) செல்தகு மேலெழுதுதலின் அடிப்படைக் கூறுகளை கூறுக. (ஏதேனும் 5)

44. அ) நுகர்வோர் பாதுகாப்பில் வணிகத்தின் பங்கினை விளக்குக. (ஏதேனும் 5)

(அல்லது)

ஆ) ஏதேனும் ஐந்து அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டங்களை விளக்குக.

45. அ) பாரம்பரிய சந்தையிடுகை எவ்வாறு மின்சந்தையில் இருந்து வேறுபடுகிறது – விளக்குக ?

(அல்லது)

ஆ) பலவகையான திறந்த மற்றும் இரகசிய வகையில் செய்யப்படும் வாக்கெடுப்பு முறைகளை விளக்குக.

46. அ) வியாபார அடிப்படையிலான தொழில்முனைவு வகைப்பாட்டினை விவரித்து எழுதுக. (ஏதேனும் 5)

(அல்லது)

ஆ) நுகர்வோரின் பொறுப்புகள் யாவை ? (ஏதேனும் 5)

47. அ) செபியின் அதிகாரங்களை விவரி ? (ஏதேனும் 5)

(அல்லது)

ஆ) ஆட்சேர்ப்பு முறைக்கும் தேர்ந்தெடுத்தலுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவரி. (ஏதேனும் 5)

***/***

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com